
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1031

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

32

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

“உலகத்தில் சட்டம் இயற்றும் எந்த நாடும் செய்ய முடியாத அயோக்கியத்தனத்தை மோடியும் அமித்ஷாவும் செய்துள்ளனர். 1995, 2013-ஆம் ஆண்டுகளில் என்ன சட்டத் திருத்தங்கள் வந்ததோ அவற்றை சத்தமின்றி நீக்கிவிட்டு, கொண்டு வரப்பட்டதே தற்போதைய சட்டத் திருத்தம். இஸ்லாமியர்கள் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக கொண்டு வரப்பட்ட திருத்தங்களை நீக்கிவிட்டு, கொண்டு வருவதற்கு பெயர் நல்ல சட்டமா?

“ஒரு சட்டத்தை நாடாளுமன்றம் நிறைவேற்றுகிறது என்றால், 140 கோடி மக்களும் அதனை ஒப்புக்கொண்டதாக பொருள். அதே சட்டத்தை எதிர்த்து, தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதாவது, அந்த சட்டத்தை எட்டு கோடி மக்கள் எதிர்க்கிறார்கள்.

நாடாளுமன்றம் ஒன்று சொல்கிறது, சட்டமன்றம் ஒன்று சொல்கிறது. இந்த மோதல் இப்படியே சென்றால், நாடு ஒன்றாக இருக்காது. சட்டமன்றமும், நாடாளுமன்றமும் எதிரும் புதிருமாக இருந்தால், அது ஜனநாயகத்திற்கு நல்லதா?” என வக்பு சட்டத் திருத்த மசோதா தாக்கல் செய்தபோது, நாடாளுமன்றத்தில் கடுமையாக வாதம் செய்தார் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா அவர்கள்.

இந்திய அரசமைப்பின் முகவுரையில் உள்ள மதச்சார்பின்மை, சமதர்மம், ஜனநாயகம் உள்ளிட்ட அம்சங்களைக் காப்பாற்றக்கூடிய ஒற்றை மனிதனாக இந்தியாவில் உள்ள மகத்தான தலைவராக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார் என அன்று ஆ.ராசா அவர்கள் கூறினார்.

அதுபோலவே, சட்டமன்றத்தில் ‘வக்பு வாரிய திருத்த மசோதா, முஸ்லிம் சமூகத்தை அச்சுறுத்தும் செயல்’ என்று குற்றம்சாட்டியதுடன், “தமிழ்நாடு இதற்கு எதிராகப் போராடும், தமிழ்நாடு வெற்றி பெறும்” என்று கழகத் தலைவர் உறுதி கூறி நீதிமன்றப் படியேறினார்.

## கழகத்தின் வாதங்கள்

வக்பு சட்டத் திருத்தத்தை எதிர்த்து, காங்கிரஸ் தி.மு.க., சமாஜ்வாதி, ஆம் ஆத்மி, உள்ளிட்ட கட்சிகள் மற்றும் முஸ்லிம் அமைப்புகள் சார்பில், உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. நூற்றுக்கும் மேற்பட்ட வழக்குகளில், கழகம் வைத்த வாதங்கள் அனைத்தும் அரசியலமைப்பைப் பாதுகாக்கும் நோக்கில் முன்வைக்கப்பட்டவை. தலைமைக் கழகத்தின் தலைமை வழக்கறிஞரும், மாநிலங்களவை உறுப்பினருமான பி.வில்சன் நேரடியாக களம் இறங்கினார்.

தமிழ்நாட்டில் உள்ள சுமார் 50 லட்சம் இஸ்லாமியர்களின் உரிமைகளையும், நாட்டின் பிற பகுதிகளில் உள்ள 20 கோடி இஸ்லாமியர்களின் உரிமைகளையும் மீறுவது மட்டுமில்லாமல், பா.ஜ.க அரசு பாரபட்சம் காட்டுகிறது என்பதையும் உச்சநீதிமன்றத்தின் கவனத்துக்கு எடுத்துச் சென்றது கழகம்.

வழக்கு, ஏப்ரல் மாதம் பட்டியலிடப்பட்டபோது, நீதிபதிகள் சஞ்சீவ் கண்ணா, சஞ்சய் குமார் மற்றும் கே.வி.விஸ்வநாதன் அமர்வு விசாரித்தது.

“வக்பு வாரிய சட்ட திருத்தம் என்பது அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது. எனவே, அதனை ரத்து செய்ய வேண்டும். குறிப்பாக, ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள இந்த புதிய சட்டம் என்பது இஸ்லாமியர்களை ஐந்து ஆண்டுகள் சிறையில் அடைப்பதற்கு சமமாக அமைந்துள்ளது. சட்டப்பிரிவு - 26 அப்பட்டமாக மீறப்பட்டுள்ளது. பொது ஒழுங்கு, சுகாதாரம் மற்றும் ஒழுக்கத்திற்கு

# “தி.மு.க. என்கிற இயக்கம், தத்துவம், கொள்கை இருக்கும் வரை...”

ஓவியம் : ரவி பேலட்




எதிரானதாக இருந்தால் மட்டுமே, இந்த உரிமைகளைக் கட்டுப்படுத்தும் விதமாக சட்டம் இயற்ற முடியும். ஆனால், ஒன்றிய அரசின் தற்போதைய நடவடிக்கை என்பது சட்ட விதிகள் அனைத்திற்கும் புறம்பானதாக உள்ளது” என வாதிட்டார் வழக்கறிஞர் வில்சன்.

## இடைக்காலத் தீர்ப்பு

செப்டம்பர் 15-ஆம் தேதி அன்று, இந்த வழக்கில் இடைக்கால தீர்ப்பினை வழங்கிய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பி.ஆர். கவாய், வக்பு திருத்த சட்டம் முழுமைக்கும் தடை விதிக்காமல், அந்த சட்டத்தில் உள்ள சில முக்கிய பிரிவுகளுக்கு இடைக்கால தடை விதித்தார்.

எனினும், தீர்ப்பு ஒன்றிய பா.ஜ.க. அரசு அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிராக, சட்டவிரோதமாகச் செய்துள்ள திருத்தங்களை நீக்குவதைத் தடுக்கும் முக்கிய நகர்வாக அமைந்தது.

1. வக்புக்கு சொத்தை அளிக்க, 5 ஆண்டு இஸ்லாத்தைக் கட்டாயமாக நடைமுறையில் கடைப்பிடித்திருக்க வேண்டும் எனும் விதிக்குத் தடை. அதாவது, இஸ்லாமிய நடைமுறைகளை ஐந்து ஆண்டுகளாகப் பின்பற்றுகிறாரா என்பதைத் தீர்மானிப்பதற்கு இப்போது எந்த விதியும் இல்லாத நிலையில், மாநில அரசுகளால் உருவாக்கப்படும் விதிகள் மூலம் அது தீர்மானிக்கப்படுவதற்கான முறை வகுக்கப்படும் வரை அந்தப் பிரிவு நிறுத்தி வைக்கப்படுகிறது. இத்தகைய முறை இல்லாத பட்சத்தில் அதிகார துஷ்பிரயோகம் செய்யப்படலாம்.

2. வக்பு நிலத்தை அரசு நிலம் என்று ஒரு குற்றச்சாட்டு எழுந்தாலே, உரிய அதிகாரி அறிக்கை அளிக்கும்வரை அல்லது அரசு முடிவெடுக்கும் வரை அச்சொத்தைப் பறிக்கும் அதிகாரத்துக்குத் தடை

3. ‘வக்பு பயனர்’ என்பதை நீக்கும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கான அதிகாரத்துக்குத் தடை (நீண்டகால மதப் பயன்பாட்டின் அடிப்படையில் வக்பு சொத்துகளாகக் கருதப்படும் சொத்து) குறிப்பாக, வக்ஃபு சொத்தின் உரிமைகளைத் தீர்மானிக்க மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் தருவது அரசமைப்புச் சட்டம் வகுத்துள்ள, அதிகாரப் பிரிவினைக்கு எதிரானது; நிர்வாகத் துறை சார்ந்த (Executive) அதிகாரி குடிமக்களின் உரிமைகளைத் தீர்மானிக்க அனுமதிக்க முடியாது.

4. மத்திய வக்பு வாரியத்தில் நான்குக்கும் மேற்பட்ட முஸ்லிம் அல்லாதோரைச் சேர்ப்பது, மாநில வக்பு வாரியங்களில் மூன்றுக்கும் மேற்பட்ட முஸ்லிம் அல்லாதோரைச் சேர்ப்பதற்குத் தடை. இதனால், இந்த வாரியங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருப்பது உறுதிசெய்யப்படும். குறிப்பாக, 20 உறுப்பினர்களில் நான்கு பேர்களுக்கு மேல் முஸ்லிம் அல்லாதவர்களாக இருக்கக் கூடாது. அதேபோல், பிரிவு 14-ன் கீழ் மாநில வாரியங்களுக்கு, 11 உறுப்பினர்களில் மூன்று பேருக்கு மேல் முஸ்லிம் அல்லாதவர்களாக இருக்கக் கூடாது என்கிற அந்தத் தீர்ப்பின் மூலம், வக்பு திருத்தச் சட்டத்தின் ஆபத்தான பிரிவுகளுக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்தது. அதன் மூலம் முஸ்லிம் சமூகத்தின் வக்பு சொத்துகளை அபகரிப்பதற்கு, பா.ஜ.க. அரசு செய்த முயற்சி தற்காலிகமாகத் தடுக்கப்பட்டது. அதைவிடவும் முக்கியமாக, இஸ்லாமியர்களின் மத உரிமைகளையும் அடிப்படை உரிமைகளையும் அரசியலமைப்புச் சட்டத்தையும் உச்சநீதிமன்றம் பாதுகாக்கும் என மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை வலுப்படுத்தும் விதத்தில் அமைந்தது.

“எனக்கு பின்னால் இருக்கும் எங்கள் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினை. அந்தத் தலைவன் ஏற்றுக்கொண்ட பெரியார், அண்ணா, கலைஞர், அம்பேத்கர் கொள்கைகளைப் பார்த்து பயப்படுகிறார்கள். தி.மு.க என்கிற இயக்கம், தத்துவம், கொள்கை இருக்கும் வரை இஸ்லாமியர்களோடு போராடுவோம், இஸ்லாமியர்களுக்கு துணை நிற்போம்” என நாடாளுமன்றத்தில் ஆ.ராசா அவர்கள் முழங்கியதற்கு ஏற்ப, உறுதியாக நிற்கிறது கழகம் . ‘உச்ச நீதிமன்றத்தில் இறுதி தீர்ப்பு வரும் வரை புதிய வக்பு திருத்தச் சட்டத்தின் படி, தமிழ்நாடு வக்பு வாரியம் திருத்தி அமைக்கப்படாது என்றும் திட்டவட்டமாக அறிவித்துள்ளது கழக அரசு!

...தொடரும்

> **‘உச்ச நீதிமன்றத்தில் இறுதி தீர்ப்பு வரும் வரை புதிய வக்பு திருத்தச் சட்டத்தின்படி, தமிழ்நாடு வக்பு வாரியம் திருத்தி அமைக்கப்படாது என்றும் திட்டவட்டமாக அறிவித்துள்ளது கழக அரசு!**

## பார்க்கவும், பகிரவும் ஒரு தரவு தளம்!

சமூக - பொருளாதார வளர்ச்சியில், இந்தியாவில் முதன்மையாகத் திகழும் மாநிலம் தமிழ்நாடு என்பதற்கு, ஒன்றிய அரசு தரும் புள்ளிவிவரங்களே சாட்சி. அதற்கான சான்றுகளை அழகான வீடியோ காட்சிகளாக, தரவுப் படங்களாக தருகிறது NO.1 Tamilnadu என்கிற சமூக வலைதளப் பக்கம்.

பல அளவீடுகளில் இந்தியாவை விட, தமிழ்நாடு முன்னிலையில் உள்ள தகவல்கள் தொடர்ச்சியாக பதிவேற்றம் செய்யப்படுகின்றன. இந்தப் பக்கத்தில் இருந்து, சமூக வலைதளங்களில் அவற்றைப் பலரும் பகிர்ந்து கொள்கின்றனர்.

நிலையான வீடுகளில் வசிப்போர் எண்ணிக்கையில் தமிழ்நாடு முன்னிலை!

மலைவாழ் குழந்தைகள் பள்ளி செல்ல வாகன வசதி!

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் பேச பயிற்சி!

குடும்பப் பெண்களின் பொருளாதாரத்தை மேம்படுத்திய மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் புள்ளிவிவரங்கள்! ‘மக்களைத் தேடி மருத்துவம்’, ‘மாற்றுத்திறனாளிகள் நலன்’, ‘நான் முதல்வன்’ திட்டத்தின் பயனாளிகள் என தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் அனைத்து திட்டங்களின் புள்ளிவிவரங்களும், பயனாளிகள் குறித்த தகவல்களும் காட்சித் தொகுப்புகளாக இந்த சமூக வலைதளப் பக்கத்தில் கிடைக்கின்றன.

தொழில் உற்பத்தி, ஏற்றுமதி, கல்வி, நூலகங்கள் என அனைத்து துறைகளிலும் அரசின் சாதனைகளை அறிந்து கொள்ளவும், பகிர்ந்து கொள்ளவும் பயனுடையதாக இந்த சமூக வலைதளப் பக்கம் உள்ளது. யூடியூப் மற்றும் எக்ஸ் தளத்திலும் NO. 1 Tamilnadu வாசிக்கலாம், பகிரலாம். இணைவதற்கு இந்த ‘கியூ ஆர் கோட்’ ஸ்கேன் செய்யவும்..

## ஃப்ளாஷ்பேக்



## மறக்க முடியாத பொக்கிஷம்!



கே.வி.லோகேஷ்

2015-ஆம் ஆண்டு, இன்றைய கழகத் தலைவர் அவர்கள், ‘நமக்கு நாமே விடியல் மீட்பு பயணம்’ என்பதை முன்னெடுத்து, தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அந்த வகையில், திருவள்ளூர் மாவட்டம், லக்கிவாக்கத்துக்கு தளபதி அவர்கள் வந்தபோது, பொன்னாடை போர்த்தி வரவேற்றேன். அப்போது எடுக்கப்பட்ட இந்தப் புகைப்படம், என் வாழ்நாளில் மறக்க முடியாதது. மாணிக்கத்துக்கு இணையானது.

**- கே.வி.லோகேஷ்,**
**மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்,**
**லக்கிவாக்கம், திருவள்ளூர் கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### விடுதலையான அன்றே பொதுக்கூட்டம்!

1962-ஆம் ஆண்டு, அக்டோபர் 24 - ஆம் தேதி, விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் சிறைசென்ற பேரறிஞர் அண்ணா, 97 நாட்களுக்குப் பின்னர் விடுதலை ஆனார். அன்று மாலையே வேலூர் கோட்டை மைதானத்தில் பொதுக்கூட்டம். அவருடன் விடுதலையான அனைவரும், பேரணியாக வருகை தந்து பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.